# 34. கந்தர் ஒருபா ஒருபஃது

கட்டளைக் கலித்துறை

**உலக மியாவுந் தொழவுள வாதி யொருவனென்னும்**
**நலமலி கந்த சுரேசுர நீயுநின் னல்லறிவின்**
**நிலவு முறழ்வுயிர்க் கூட்டமு நின்னாற் றொழிற்படுமா**
**பலமலி பாசமு நித்தமென் றேமறை பன்னுமன்றே.**

*உலகம் யாவும் தொழ உள ஆதி ஒருவன் என்னும்*
*நலம் மலி கந்த சுர ஈசுர நீயும் நின் நல்லஅறிவின்*
*நிலவும் உறழ் உயிர்க் கூட்டமும் நின்னால் தொழில்படுமா*
*பலமலி பாசமும் நித்தம் என்றே மறை பன்னும் அன்றே.*

எல்லா உலகங்களும் வணங்கும்படி உள்ள முதற்கடவுள் ஒருவன் என்னும் நன்மை மிகுந்த கந்தனே! தேவர்களின் கடவுளே! நீயும் உனது பேரறிவில் இயங்கும் அறிவுள்ள உயிர்க் கூட்டமும், உன்னால் செயல்படுமாறுள்ள மிக்க வலிமையுடைய பாசமும் என்றும் உள்ளவை என்று வேதங்கள் கூறும். 1

**பன்னு மறைகளுக் கெட்டா வருட்பெரும் பாவகியே**
**மன்னொரு நீதங்கஞ் சீவன்செம் பச்செம்பின் மல்குகளிம்**
**பென்ன விருப்பது பாசமென் றேர்நூ லியம்புமுண்மை**
**தன்னை யுணர்ந்துனை யேத்துவர் காணல்ல சற்சனரே.**

*பன்னும் மறைகளுக்கு எட்டா அருள் பெரும் பாவகியே*
*மன் ஒரு நீ தங்கம் சீவன் செம்பு அச்செம்பில் மல்கு களிம்பு*
*என்ன இருப்பது பாசம் என்று ஏர் நூல் இயம்பும் உண்மை*
*தன்னை உணர்ந்து உனை ஏத்துவர் காண் நல்ல சற்சனரே.*

ஓதும் வேதங்களுக்கு எட்டாத அருளாகிய பெரிய பாவகியே! நிலையான நீ ஒப்பற்ற தங்கம்; உயிர் செம்பு. பாசம் அச்செம்பில் மிகுந்துள்ள களிம்பு என்று அழகிய நூல்கள் கூறும். இந்த உண்மையை உணர்ந்து அறிவுடையவர் உன்னைத் துதிப்பர்! 2

**சற்சங்க நாளும் படனஞ்செய் தந்திரஞ் சாற்றுமுது**
**துர்ச்சங்க நீத்த பசுவெனுஞ் செம்பின் றுருசொழித்து**
**நற்செம்ப தாக்கிப்பொன் னாயவுன் னோடயி னாயகனீ**
**நிர்ச்சங்க மாக்கிக் கொளன்முத்தி யென்று நிசானந்தனே.**

*சற்சங்கம் நாளும் படனம் செய் தந்திரம் சாற்று முது*
*தூர்ச்சங்க நீத்த பசுஎனும் செம்பின் துருசு ஒழித்து*
*நல்செம்பது ஆக்கிப் பொன் ஆய உன்னோடு அயில் நாயகன் நீ*
*நிர்ச்சங்கம் ஆக்கிக் கொளல் முத்தி என்றும் நிசஆனந்தனே.*

நிசானந்தனே! நாள்தோறும் சற்சங்கத்தார் பாராயணம் செய்யும் வேதங்கள் கூறும் தீய கூட்டமான மும்மலங்களை நீக்கிய உயிர் எனும் செம்பின் குற்றமான களிம்பை நீக்கி, அதனைத் தூய செம்பாக்கும் வேற்படையோனே! பொன்னாகிய உன்னுடன் கலக்கச் செய்வேதே என்றும் முத்தி என்று கூறுவர்! 3

**நிசமறி யார்பர னெண்ணுகிற் பாச நிலையழிந்தே**
**உசித முறாதோ வெனப்புகன் றுன்னைவிட் டோய்வரகம்**
**நசிய வடக்கிநின் கண்ணின்று தஞ்செய னந்தியபின்**
**பிசியிலின் பாமென் றறியாது வேலைப் பிடித்தவனே.**

*நிசம் அறியார் பரன் எண்ணுகில் பாசம் நிலை அழிந்தே*
*உசிதம் உறாதோ எனப்புகன்று உன்னை விட்டு ஓய்வர் அகம்*
*நசிய அடக்கி நின் கண் நின்று தம் செயல் நந்திய பின்*
*பிசியில் இன்பாம் என்று அறியாது வேலைப் பிடித்தவனே.*

வேலிறைவனே! உண்மை அறியாதார் கடவுள் நினைத்தால் பாசம் தன் தன்மை கெட்டு மேன்மை அடையாதோ எனக் கூறிச் சும்மா இருப்பார்; மனம் அழியும்படி அடக்கி, நின்னிடமிருந்து தம் செயல் அடக்கிய பின்பு பொய் இல்லாத இன்பம் உண்டாகும் என அறியாது கூறினர். 4

**பிடித்த பிடியை விடாவயி ராக்கியம் பெற்றவர்க்குள்**
**நடிக்கு முருகா வணுக்கண் மலத்தை நசித்தமுதம்**
**குடிக்க வருள வெனவே தினமுங் குறுக்கமற்ற**
**கடிக்கரு மங்களொ ரைந்தையுஞ் செய்வாய் கரிசின்றியே.**

*பிடித்த பிடியை விடா வயிராக்கியம் பெற்றவர்க்கு உள்*
*நடிக்கும் முருகா அணுக்கண் மலத்தை நசித்து அமுதம்*
*குடிக்க அருள எனவே தினமும் குறுக்கம் அற்ற*
*கடிக்கருமங்கள் ஓர் ஐந்தையும் செய்வாய் கரிசு இன்றியே.*

தாம் கொண்ட கொள்கையை உறுதியுடன் விடாது பற்றும் வைராக்கியம் உடையவருக்குள் நடித்தருளும் முருகா! உயிர்கள் மலத்தை ஒழித்து அமுதம் பருக அருள்புரிய எனத் தினமும், குறைவற்ற சிறந்த ஐம்பெருந் தொழில்களை (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) குற்றமின்றி நீ செய்தருளுவாய்! 5

**கரிசற்ற சேய்நிற் கணித்தா லுயிர்த்தொகை யின்கணக்கும்**
**பரிவுற் றுரைத்திட லாமென்று தேரும் பலமிறந்தோர்**
**புரிவுற்ற யாவுங் கதிபெற்ற பின்னர்ப் புரியுமைந்து**
**பிரிவுற்ற காரிய மேதென்று வாதித்துப் பேசுவரே.**

*கரிசு அற்ற சேய் நிற்குஅணித்தால் உயிர்த்தொகையின் கணக்கும்*
*பரிவுற்று உரைத்திடலாம் என்று தேரும் பலம் இறந்தோர்*
*புரிவுற்ற யாவும் கதிபெற்ற பின்னர்ப் புரியும் ஐந்து*
*பிரிவுற்ற காரியம் ஏதென்று வாதித்துப் பேசுவரே.*

குற்றமற்ற குழந்தை வேலனே! உன்னைக் கணக்கிட்டு இவ்வளவு என்று அறிந்துகொண்டால் உன்னால் படைக்கப்பட்ட உயிர்த் தொகையும் இவ்வளவு என்று கூற முடியும்; இவ்வாறு அறியும் வலிமையற்றோர் உடம்பு பெற்ற எல்லா உயிர்களும் கதி அடைந்த பின்னர், நீ செய்யும் ஐந்து பெருந்தொழில் வகையின் செயல் எவ்வாறு நடக்கும் என்று தருக்கம் செய்து பேசுவர்! 6

**பேசா மவுனச் சிவனே குகனே பெரியவருன்**
**தேசோ மயத்தை யுறுமுயிர்ச் சத்தி செகமுகம்விட்**
**டேசால வுண்முக மாயின்ப முண்பதி னீடிலுன்னல்**
**தேசேறு காரிய மோரைந்துஞ் சத்தெனத் தேறுவரே.**

*பேசா மவுனச் சிவனே குகனே பெரியவர் உன்*
*தேசோ மயத்தை உறும் உயிர்ச் சத்தி செகமுகம் விட்டே*
*சால உள் முகமாய் இன்பம் உண்பதில் ஈடில் உன் நல்*
*தேசு ஏறு காரியம் ஓர் ஐந்தும் சத்து எனத் தேறுவரே.*

பேசாத மௌனமுள்ள சிவனே! குகனே! பெரியோர்கள் நினைக்கும் ஒளிமயமானதைப் பெறும் உயிர்களின் சத்தி, உலகத்தைச் சார்வதை விட்டு நன்றாக உள் முகமானால், இன்பம் நுகர்வதில் இணையில்லாத உன் நல்ல புகழுடைய தொழில்கள் ஐந்தும் சத்து எனத் தெளிவார்கள். 7

**தேறுந் தெளிவைக் கொடுத்தென்னை யாளுந் திருமுருகா**
**ஏறுமு னிச்சையென் சத்தியு ஞானமு மேண்டொழிலும்**
**மாறு முயிர்க்கிலை யேலது சேதன மாண்பவித்துக்**
**கூறு மசேதன மாயிருத் தற்கையங் கோளிலையே.**

தேறும் தெளிவைக் கொடுத்து என்னை ஆளும் திருமுருகா
ஏறும் உன் இச்சை என் சத்தியும் ஞானமும் ஏண் தொழிலும்
மாறும் உயிர்க்கு இலையேல் அது சேதன மாண்பு அவித்துக்
கூறும் அசேனதமாய் இருத்தற்கு ஐயம் கோள் இலையே.

தெளிந்தறியும் அறிவைக் கொடுத்து என்னை அடிமை கொண்ட முருகா! உயிரைச் செயற்படுத்தும் உன் இச்சா சத்தி, ஞான சத்தி, பெருமையுடைய கிரியா சத்தி ஆகிய மூன்றும் மாறும். உயிர்க்கு இல்லையேல், அது அறிவுடைப்பொருள் என்னும் சிறப்பொழிந்து சொல்லப்படும் அறிவற்ற சடப்பொருள் என்பதற்கு ஐயமில்லை! 8

**கோளற்ற நின்ற னருட்சத்தி யாதோர் குணவுயிரின்**
**ஆளுற்ற நெஞ்சுட் பதிந்துநற் பக்குவ மாயதன்மேல்**
**கேளுற்ற நீவந்து கோடலுண் டென்னக் கெழுதகையுன்**
**தாளுற்ற தொண்டர்கள் சான்று பராபர சண்முகனே.**

கோள் அற்ற நின்தன் அருட் சத்தி யாதுஓர் குணஉயிரின்
ஆள் உற்ற நெஞ்சுள் பதிந்து நற்பக்குவமாய் அதன் மேல்
கேள் உற்ற நீவந்து கோடல் உண்டுஎன்னக் கெழுதகை உன்
தாள் உற்ற தொண்டர்கள் சான்று பராபர சண்முகனே.

மேலான கடவுளான சண்முகனே! பொய்யற்ற உனது அருட் சத்தி, ஏதேனும் ஒரு குணமுள்ள உயிரின் அடிமைப்பட்ட மனத்துள் பதிந்து நல்ல பக்குவமானதன் பின்பு, நட்புடைய நீ வந்து கொள்ளுதல் உண்டு என்று உரிமையுள்ள உன் திருவடியை அடைந்த தொண்டர்கள் சான்று! 9

**சண்முக நிச்சய மோர்ந்து திருப்புகழ் சாற்றினவன்**
**தெண்மதி யோங்க விழைத்த குகாநெடுந் தீயவினை**
**கண்மடித் தாளரு டான்பதி வானெக் கருளுமெல்லும்**
**உண்முகத் துன்னைவைத் தேநிற்ப ரன்ப ருலகிலன்றே.**

*சண்முகம் நிச்சயம் ஓர்ந்து திருப்புகழ் சாற்றினவன்*
*தெண்மதி ஓங்க விழைத்த குகா நெடும் தீயவினை*
*கள்மடித்து ஆள் அருள்தான் பதி வான் எனக்கு அருளும் எல்லும்*
*உன் முகத்து உன்னை வைத்தே நிற்பர் அன்பர் உலகில் அன்றே.*

ஆறுமுகன் உண்மையை அறிந்து திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதரின் தெளிவான அறிவு ஓங்க விரும்பிய குகப்பெருமானே! மெய்யன்பர்கள் இவ்வுலகில் பெரிய தீவினைகள் ஒழித்து, நீ அடிமை கொண்டு அருள் பதித்தற் பொருட்டு, மனத்தில் உன்னை இரவும் பகலும் தியானித்தபடி இருப்பர்! 10